# பாரதிய ஜனதா கட்சி

(மத்திய அலுவலகம்)
11, அசோக் ரோடு, புது தில்லி 110001
தொலைபேசி. எண்: 23005700; பேக்ஸ்: 23005787

தேதி: பிப்ரவரி 11, 2013

**பா.ஜ.க. தேசிய செய்தியாளரும் எம்.பி.யுமான ஸ்ரீ பிரகாஷ் ஜாவேத்கர்**
**வெளியிட்ட பத்திரிகை அறிக்கை**

2001ஆம் ஆண்டு இந்தி? நாடாளுமன்றத்தின் மீது நடைபெற்ற கொடூரமான தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய சதிகாரர்களில் ஒருவனான அப்சல் குரு தூக்கிலிடப்பட்டது தொடர்பாக, ஜம்மு கஷ்மீர் முதல்வர், ஓமர் அப்துல்லா வெளியிட்டிருந்த கருத்துக்கு பா.ஜ.க. தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

*பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்த திரு.ஓமர் அப்துல்லா, விஷம் கக்கும் வகையில் பேசியுள்ளார். அந்த பேட்டி, அப்சல் குரு தூக்கிலடப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்ததுடன் முடிந்தது. 'அவன் சதி திட்டம் தீட்டி நடைபெற்ற பாராளுமன்றத் தாக்குதலின்போது இறந்து போன ஒன்பது பேரில் ஆறு பேர் அப்சலைவிட வயதில் இளையவர்கள் என்பதை மறந்துவிட்டு '43 வயது இளைஞன்' என்று அவனைப் பற்றிக் குறிப்பிட்டார்.*

பரபரப்பான இந்தப் பேட்டியில் முதலமைச்சர், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கே சவால் விடுவது போல விமர்சனம் செய்து பேசியுள்ளார். "இந்த தீர்ப்பு, சந்தர்ப்ப சாட்சியங்களை மட்டுமே வைத்து வழங்கப்பட்டுள்ளதாகவும், சமூகத்தின் கூட்டு மனசாட்சியைத் திருப்திபடுத்தும் வகையிலும் வழங்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார். தலைமை நீதிமன்றம், 2005-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 4-ஆம் தேதி வெளியிட்ட தனது தீர்ப்பின் 271-ஆம் பக்கத்தில் "நாடாளுமன்றத்தின் மீது நடைபெற்ற தாக்குதலில் அப்சல் குரு முக்கிய பங்கு வகித்துள்ளான் என்பதும், அளிக்கப்பட்டுள்ள சாட்சி, ஆதாரங்களின் அடிப்படையில் பார்த்தால், இந்த சதியில் அவன் ஈடுபட்டிருக்கிறான் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.' என்று குறிப்பிட்டுள்ளது. உச்ச நீதி மன்றம் மேலும் தனது தீர்ப்பில், "தாக்குதலில் நேரடியாக அவன் ஈடுபட வில்லை என்றாலும், அந்தக் கொடூரத் தாக்குதலுக்கான அத்தனை ஏற்பாடுகளிலும் அவன் பங்கேற்றுள்ளான்," என்றும் கூறியுள்ளது.

திரு, அப்துல்லா, தனது பேட்டியில், "பள்ளத்தாக்கில் ஒதுக்கப்பட்ட உணர்வு" ஏற்படுவதாக கூறியுள்ளார். இது அந்தப் பள்ளத்தாக்கில் வசிக்கும் சாதாரண இஸ்லாமியர்களை இழிவுபடுத்தும் ஒரு வாக்கியம். இது, அங்கு வாழும் அப்பாவி இஸ்லாமியர்களை பயங்கரவாதிகள் மற்றும் நாட்டின் விரோத சக்திகளோடு சேர்த்து பேசுவதற்கு சமம்.

*"காஷ்மீரின் புதிய தலைமுறை அப்சல் குருவுடன் தங்களை அடையாளம் காணும்" என்று மேலும் அதிர்ச்சியூட்டும் தீவிரமான வார்த்தைகளை இந்த பேட்டியில், அவர் பயன்படுத்தினார். காஷ்மீரத்து இளைஞர்களைப் பற்றி இவர் இப்படி கூறியிருப்பதற்கு கடும் கண்டனம் தெரிவித்த, பா.? .?. மேலும், "இன்றை? காஷ்மீர் இளைஞர்கள் தங்களை கிரிகெட் வீரர் ஷாமி அஹமதுடன் தான் அடையாளம் காண்பார்களே ஒழிய, அப்சல் குரு போன்ற பயங்கரவாதியுடன் அல்ல" என்றும் கூறியுள்ளது.*

ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றிருக்கும், ஜம்மு, காஷ்மீர் முதலமைச்சரின் நிலைப்பாட்டை தாங்கள் ஆதரிக்கிறோமா இல்லையா என்பதை காங்கிரஸ் கட்சி கண்டிப்பாக தெளிவுபடுத்தியே ஆகவேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி, கோருகிறது.

**அலகாபாத் நெரிசல் மரணங்கள்**

அலகாபாத்தில் நடைபெற்ற மஹா கும்ப மேளாவின் போது ஏற்பட்ட, 'தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய கூட்ட" நெரிசலில் சிக்கி, 40க்கும் மேற்பட்ட மக்களின் மரணம் குறித்து, அதிர்ச்சியையும் துயரத்தையும் பாரதிய ஜனதா கட்சி தெரிவிக்கிறது. இந்த துரதிர்ஷ்வசமான சம்பவத்தில் தங்கள் விலை மதிப்பற்ற உயிர்கள் இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, படுகாயமுற்று சிகிச்சைப் பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகளையும் தெரிவிக்கிறது.

? .பி. அரசும், மத்திய அரசும் இந்த சம்பவத்துக்கான பொறுப்பு என்று அப்பட்டமாக ஒருவரை ஒருவர் பழி கூறி வருகின்றன. ரயில்வே அமைச்சகமும் உத்திர பிரதேச அரசும் இந்த சம்பவத்துக்கு ?? அளவில் பொறுப்பேற்க வேண்டும். 'மகாளய அமாவாசை" அன்று இதுவரை இல்லாத அளவு ஆனால், எதிர்பார்க்கப்பட்ட மாபெரும் கூட்டத்தை சமாளிக்க வழிவகைகள் செய்திருக்க வேண்டும்.

நெரிசலில் சிக்கி மக்கள் உயிரிழப்பது போன்ற இப்படிப்பட்ட துயரமான சம்பவங்களைத் தடுக்க, முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்காத அரசின் அலட்சியமான அணுகுமுறையைத்தான் சுட்டிக்காட்டுகின்றன.

*நாடு முழுவதும் விபத்துகள் இல்லாமல் புனிதப் பயணங்கள் நடைபெறுவதற்கு தெளிவான, விரிவான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் இதில் உள்ள சவால்.*

இந்த விபத்து குறித்த உடனடி நீதி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இந்த துயர சம்பவத்தில் பலியான பக்தர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று பி.ஜே.பி. கோருகிறது.

<u>சுற்றுச்சூழல் லைசன்ஸ் ராஜ்</u>

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி கண்காணிப்பு மற்றும் லைசன்ஸ் ராஜ் இரண்டும் பல்வேறு திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் அனுமதி என்ற வடிவில் திரும்பி வந்துள்ளது.

அனைத்து வளர்ச்சித் திட்டங்களுக்கும் விரைவாக அனுமதி வழங்குவதற்காக அரசு தேதி? முதலீட்டு சபையை அமைத்துள்ளது. ஆனால், அடிப்படையில் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் நடவடிக்கை தற்போதும் மிகப் பெரிய தடையாகவே இருந்து வருகிறது. பிரதம மந்திரி அலுவலகமும் சுற்றுச்சூழல் அமைச்சகமும் உத்தரவாதம் அளித்தவண்ணம் இருந்தாலும் தொழிற்துறை ஒரு புதிய ‘சுற்றுச்சூழல் லைசன்ஸ் ராஜ்’ ? எதிர்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

இந்த நிலவரம் நாட்டின் வேகமான வளர்ச்சிக்கு ஆதரவானது அல்ல. இந்தப் பிரச்சினையை அரசு வேவ்வேறு விதமாக இழுத்தடிப்பதால்தான் இந்த நெருக்கடி தொடர்கிறது.

இந்தியாவின் ஏற்றுமதியை பாதிக்கக் கூடிய சர்வதேச நெருக்கடியை சமாளிக்க இந்த முக்கியமான பிரச்சினையில் அரசின் பல்வேறு அமைப்புகளுக்கிடையே ஒருமித்த கருத்து தேவை.

(ஓ.பி. கோஹ்லி)
தலைமையக பொறுப்பாளர்